# இணைப்பு - 1.4

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பதவி காலம் மேலும் நீட்டித்து பிறபிக்கப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.247, ஊரக வளர்ச்சி(சி4) துறை, நாள் 23.11.1998)

சுருக்கம்

ஊராட்சிகள் - மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய முதல்நிலைக் குழு அமைக்கப்பட்டது - குழுவின் பதவி நீட்டிப்பு காலம் 10.11.98 உடன் முடிவடைந்தது - மறு நீட்டிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

படிக்கப்பட்டது.

1. அரசு ஆணை நிலை எண்.320, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 11.11.97.
2. அரசு ஆணை நிலை எண்.78, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 28.4.98.
3. அரசு ஆணை நிலை எண்.100, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 22.5.98.

* * *

ஆணை

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்று மற்றும் இரண்டில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் முதல்நிலைக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 6 மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்கவேண்டும். இக்குழு முதல் 6 மாத காலம் 10.5.98-உடன் முடிவடைந்ததால் இக்குழுவின் பதவிக்காலத்தை மேலும் 6 மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை நீட்டித்து பார்வையில் மூன்றில் கண்ட அரசு ஆணையில் ஆணையிடப்பட்டது.

2. இக்குழுவின் பதவி நீட்டிப்பு காலம் 10.11.98-உடன் முடிவடைந்தது. குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் குழு தனது பணியை தொடர்வது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே இக்குழுவின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்று அரசு முடிவு செய்தது. அதன்படி இக்குழுவின் பதவிக்காலத்தை 11.11.98 முதல் இரண்டு மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

3. 11.11.98 முதல் இவ்வாணை வெளியிடும் நாள் வரை இக்குழு தொடர்ந்து பணிபுரிந்து வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை 1951-ம் ஆண்டு தமிழ்நாடு ஊதியம் வழங்குதல் சட்டத்தின்படியும், சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லாத உறுப்பினர்கள்

தமிழ்நாடு பயணப்படி விதிகள் பாகம் II விதி 11(2)-ன் கீழ் பெற தகுதியுடையவராவார். இதற்கு ஆகும் செலவினங்கள் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:-

"3451-00 தலைமைச் செயலகம், பொருளாதாரப் பணிகள் - 090 - தலைமைச் செயலகம் - I திட்டத்தில் சேராதது - AE - ஊரக வளர்ச்சித் துறை - DP Code No.3451 - 00 - 090 - AE - 0100".

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 4558/FS/P/98, நாள் 3.11.98-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,<br>அரசுச் செயலாளர்.